**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I
8073085

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C

1. District மாவட்டம் : விழுப்புரம் PS: காவல்நிலையம் ஊ.த.க பிரிவு Year ஆண்டு 2019 FIR No. மு.த.அ. எண்: 3/19 Date நாள்: 28.01.2019

2. (i) Act சட்டம்: PC Act 1988 as Amended — Sections பிரிவுகள்: 7 of PC Act
(ii) Act சட்டம்: by PC Act 2018 — Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: (Amendment) — Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from : நாள் முதல் 11.01.2019 — Date to : நாள் வரை
Time Period : நேர அளவு — Time from : நேரம் முதல் 17.20 hrs — Time to : நேரம் வரை 19.30 hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 11.01.2019 — Time : நேரம்
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் — Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கணினி தட்டச்சு மூலம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் விழுப்புரம் மாவட்ட ஆட்சித்தலைவர்,
Beat Number : முறைக் காவல் எண் (b) Address முகவரி அலுவலகத்தின் இரண்டாவது தளத்தில் அமைந்துள்ள உதவி இயக்குநர் (தணிக்கை) அலுவலகம், விழுப்புரம் சுமார் 500 மீட்டர் வடமேற்கு.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் R. பாலகோபன்
(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் ராஜாராம்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு
(d) Nationality : நாட்டினம் இந்தியன்
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்
Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டம்.
(g) Address : முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி நிதி தணிக்கை துறை அலுவலர்கள், விழுப்புரம்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
சட்டக் கருத்துரை பெற வேண்டியிருந்ததால் தாமதம்.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) —

பணிந்து சமர்பிக்கப்படுகிறது. 11.01.2019 ந்தேதி மாலை 19.00 மணிக்கு விழுப்புரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் நான் பணியில் இருந்த போது திருமதி.அ.அமுதா, துணை ஆய்வுக்குழு அலுவலர், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டம், கடலூர். என்பவர் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று கீழ் கண்டவாறு வழக்கு பதிவு செய்யப்பட்டது. புகாரின் விவரம் பின்வருமாறு அனுப்புநர், R.பாணுகோபன், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டம், கடலூர். பெறுநர், காவல் துணை கண்காணிப்பாளர்அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, விழுப்புரம். ந.க.எண்:அ/15/2019, நாள்:11.01.2019 அய்யா, பொருள்: திடீர் ஆய்வு - விழுப்புரம் மாவட்டம் - விழுப்புரம் மாவட்ட உதவி இயக்குநர் தணிக்கை அலுவலகம் - 11.01.2019 அன்று விழுப்புரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு - காவல் ஆய்வாளர் அவர்களுடன் திடீர் ஆய்வு - புகார் கொடுத்தல் - தொடர்பாக:- பார்வை: திடீர் ஆய்வு மகஜர் நாள்:11.01.2019.இன்று எனக்கு 11.01.2019 ந்தேதி காலை 12.00 மணிக்கு கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலராக பணிபுரியும் R.பாணுகோபன் ஆகிய நான் எனது அலுவலகமான விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் இரண்டாவது தளத்தில் தெற்கு நோக்கி அமைந்துள்ள எண் 19 கொண்ட அறையில் இயங்கிவரும் உதவி இயக்குநர் (தணிக்கை) அலுவலகத்தில் விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி கோட்டங்களில் உள்ள ஊராட்சி ஒன்றியங்களுக்கான தணிக்கை தடையை நிவர்த்தி செய்வதற்கான கூட்ட அமர்வு நடைபெறுவதாகவும் அதில் கலந்துகொள்ளும் ஊராட்சி ஒன்றியங்களை சேர்ந்த சம்மந்தப்பட்ட அதிகாரிகளிடம் தணிக்கை தடையினை காரணப்படுத்தி லஞ்சமாக பணம் வசூலிப்பதாக கிடைத்த தகவலின் அடிப்படையில் நான் விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள எனது அலுவலக அறையில் இருந்து புறப்பட்டு விழுப்புரம் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும்
(Continued in separate sheet)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ......—...... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS......................—........................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

[M. சதீஷ்]

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் காவல் ஆய்வாளர்
Rank: நிலை ......................No. எண் ..........
உ.ஊ.த.க பிரிவு,
விழுப்புரம்

கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு 16.00 மணிக்கு சென்று அங்கு பணியில் இருந்த காவல் ஆய்வாளர் திரு.M.சதீஷ் அவர்களிடம் எனக்கு கிடைத்த தகவலை பற்றி ஆலோசனை செய்தேன். பின்னர் அவர் அலுவலகத்தில் இருந்த காவல் ஆளிநருடன் ஆலோசனை செய்தார். பிறகு நான், ஆய்வாளர் சதீஷ் மற்றும் காவல் குழுவினருடன் 16.45 மணிக்கு புறப்பட்டு 17.00 மணிக்கு விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இரண்டாவது தளத்தில் இயங்கிவரும் உதவி இயக்குநர் (தணிக்கை) அவர்களது அலுவலகத்தில் நுழைந்து அங்கு பணியில் இருந்த திரு.A.துரைசாமி உதவி இயக்குநர் (தணிக்கை) விழுப்புரம் கோட்டம் மற்றும் திரு.முத்தழகு உதவி இயக்குநர் (தணிக்கை) உதவி இயக்குநர் தணிக்கை அலுவலகம், கள்ளக்குறிச்சி கோட்டம் ஆகியோர்களிடம் என்னையும் என்னுடன் இருந்த ஆய்வாளர் மற்றும் இதர காவல் ஆளிநர்களை அறிமுகம் செய்து வைத்து திடீர் தணிக்கை செய்வதற்கான காரணத்தை விளக்கி கூறினேன். பின்னர் எனது திடீராய்வு தொடர்பாக ஏதேனும் மறுப்பு உள்ளதா என கேட்டபோது அவர்கள் இருவரும் எவ்வித மறுப்பும் இல்லை என்றும் ஆய்வு செய்து கொள்ளலாம் என்று கூறினார்கள். பின்னர், எனது முன்னிலையில் காவல் ஆய்வாளர் சதீஷ் மற்றும் அவரது குழுவினர் உதவியுடன் மேற்படி அலுவலகத்தை 17.20 மணிக்கு திடீராய்வு தொடங்கப்பட்டது. நான் அலுவலகத்தில் பொறுப்பு பணியில் இருந்த உதவி இயக்குநர் திரு. A.துரைசாமி அவர்களிடம் அலுவலகத்தில் ஊராட்சி ஒன்றியங்களுக்கான இயக்குநர் சென்னை அவர்கள் உத்தரவுப்படி தணிக்கை நடைபெறும்போது கண்டிப்பாக பராமரிக்க வேண்டிய ஊராட்சி ஒன்றிய கூட்டமர்வு உதவி இயக்குநர் (தணிக்கை), விழுப்புரம் அலுவலகத்தில் கலந்து கொள்ளும் ஆளிநர்களிடம் உள்ள கையிருப்பு விபர பதிவேட்டினை எடுத்து ஆஜர் செய்யுமாறு கேட்டுக்கொண்டேன் பின்னர் மேற்படி A.துரைசாமி அவர்கள் அவரது அலுவலகத்தில் இருந்த மேற்படி பதிவேட்டினை எடுத்து ஆஜர் செய்தார். அதில் நான் மேற்படி இரண்டு உதவி இயக்குநர்களான திரு.துரைசாமி மற்றும் திரு.முத்தழகு ஆகியோர்கள் முன்னிலையில் பார்வையிட்டதில் இன்று 11.01.2019 அன்று நடைபெற்ற கூட்டமர்வு கூட்டத்தில் 11 ஆளிநர்கள் உள்ளாட்சி நிதி தணிக்கை அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் என்றும் 46 ஆளிநர்கள் ஊரக வளர்ச்சி துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் என பெயர் மற்றும் அவர்களிடம் இருக்கும் கையிருப்பு ரொக்க விபரத்தினை எழுதி சம்மந்தப்பட்ட ஆளிநர்களிடம் கையொப்பம் பெறப்பட்டிருந்தது. மேலும் மேற்படி பதிவேட்டில் ஒவ்வொரு நபர்களுக்கும் அவர்களுக்குரிய தொகைகளை குறிப்பிடப்பட்டிருந்ததை தவிர அதிகமாக தொகைகள் வைத்திருந்தால் தவறு என தெரிவித்தார். பின்னர் அலுவகத்தில் இருந்த உதவி இயக்குநர் திரு.A.துரைசாமி அவர்களை சோதனை செய்ய அவரிடம் ரூ.2,800/- இருந்தது மேற்படி தொகை தனி நபர் பண இருப்பு பதிவேட்டில் குறிப்பிடப்பட்டு அவர் கையொப்பம் செய்யப்பட்டிருந்ததால் அத்தொகையை அவரிடம் கொடுக்கப்பட்டது. அலுவகத்தில் இருந்த மற்றொரு உதவி இயக்குநர் திரு.M.முத்தழகு அவர்களை சோதனை செய்ய அவரிடம் ரூ.1,100/- இருந்தது மேற்படி தொகை தனி நபர் பண இருப்பு பதிவேட்டில் குறிப்பிடப்பட்டு அவர் கையொப்பம் செய்யப்பட்டிருந்ததால் அத்தொகையை அவரிடம் கொடுக்கப்பட்டது. பின்னர் உதவி இயக்குநர் அலுவலகத்தை சோதனை செய்ததில் வேறு எந்த பொருளோ, பணமோ கைப்பற்றப்படவில்லை. பின்னர் நான் மேற்படி இரண்டு உதவி இயக்குநர்கள் முன்னிலையில் ஆய்வாளர் சதீஷ் மற்றும் இதர காவல் ஆளிநர்கள் உதவியுடன் உதவி இயக்குநர் தணிக்கை அலுவலகத்தில் பக்கத்தில் இருந்த அறை எண் 17 உதவி இயக்குநர் (தணிக்கை) அவர்களின் அலுவலக ஆளிநர்கள் பணிபுரிந்து கொண்டிருந்த அறையை சோதனை செய்தபோது அங்கு இருந்த கீழ்காணும் நபர்களிடம் இருந்து கீழே குறிப்பிட்டவாறு அவரவர்களிடம் பணம் இருந்தது அதன் விபரம்.

| வ.எண் | பெயர் | தொகை |
|---|---|---|
| 1. | திரு.M.மயில்சாமி,<br>த/பெ. மொட்டையன்,<br>வட்டார வளர்ச்சி அலுவலர்/கண்கணிப்பாளர்,<br>உதவி இயக்குநர் தணிக்கை அலுவலகம்,<br>கள்ளக்குறிச்சி கோட்டம்,<br>விழுப்புரம் மாவட்டம். | ரூ.2,400/-<br>(2000X1=2000<br>4X100= 400) |

| | | |
|---|---|---|
| 2. | திரு.D.பன்னீர்செல்வம்,<br>த/பெ. தர்மலிங்கம்,<br>கணக்காளர்,<br>வட்டார வளர்ச்சி அலுவலகம்<br>கல்வராயன் மலை,<br>கள்ளக்குறிச்சி கோட்டம்,<br>விழுப்புரம் மாவட்டம். | ரூ.1,500/-<br>(3X500= 1500) |
| 3. | திரு.R.ராமச்சந்திரன்,<br>த/பெ. ரகுபதி,<br>தொழில்நுட்ப உதவியாளர்,<br>வட்டார வளர்ச்சி அலுவலகம்<br>சங்கராபுரம்<br>கள்ளக்குறிச்சி கோட்டம்,<br>விழுப்புரம் மாவட்டம். | ரூ.6,000/-<br>(2000X2=4000<br>4X500=2000) |
| 4. | திரு.P.கேசவமூர்த்தி,<br>த/பெ. பிச்கமணி,<br>உதவி பொறியாளர்,<br>வட்டார வளர்ச்சி அலுவலகம்<br>மரக்கானம்,விழுப்புரம் கோட்டம். | ரூ.1,500/-<br>(3X500= 1500) |
| 5. | திரு.வே.முரளிதரன்,<br>த/பெ வேங்கட நரசிம்மன்,<br>உதவியாளர்,<br>வட்டார வளர்ச்சி அலுவலகம்<br>உளுந்தூர்பேட்டை, கள்ளக்குறிச்சி கோட்டம். | ரூ.1000/-<br>(2X500= 1500) |
| | மொத்தம் | ரூ.12,400/-<br>(2000X3=6000<br>500X12=6000<br>4X100= 400 ) |

மேற்படி அலுவலர்களிடம் கைப்பற்றப்பட்ட தொகையினை உதவி இயக்குநர் தணிக்கை அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு இன்று 11.01.2019ல் குறிப்பிடப்பட்டிருந்த தனிநபர் கையிருப்பு பதிவேட்டை ஒப்பிட்டு பார்த்ததில் மேலேகண்ட 1 முதல் 5 வரையிலான அலுவலர்களின் பெயர் மற்றும் அவர்களுக்குரிய தொகையினை தனிநபர் கையிருப்பு பதிவேட்டில் குறிப்பிடப்படவில்லை. மேலும் அவர்கள் மேற்படி தொகை வைத்திருந்தற்கான காரணத்தை சரிவர சொல்லாததால் மேற்படி பணம் ரூபாய் 12,400/- (2000X3=6000, 500X12=6000, 4X100= 400)-யை மேல் விசாரணைக்காக கைப்பற்றிக்கொண்டேன். பின்னர் எனது உத்தரவின்பேரில் அலுவலகத்தை சோதனை செய்ததில் மேற்படி அலுவலதத்தின் இடது புறத்தில் இருந்த பதிவேடுகள் இருந்த அலமாரி கீழே உரிமை கோரப்படாத ரூ.2,200/- (500X2, 200X3, 100X5, 50X2) கிடந்தது. மேற்படி பணத்திற்கான சரியான முகாந்திரம் இல்லாததால் ரூ.2,200/- மேல் விசாரணைக்காக கைப்பற்றிக் கொண்டேன். பின்னர் மேற்படி திடீராய்வின்போது பணம் கைப்பற்றப்பட்ட திரு.M.மயில்சாமி, திரு.D.பன்னீர்செல்வம், திரு.R.ராமச்சந்திரன், திரு.P.கேசவமூர்த்தி, திரு.வே.முரளிதரன் ஆகியோர்களிடம் தனித்தனியாக வாக்குமூலம் பதிவுசெய்து அவர்களிடம் கையொப்பம் பெற்றேன். மேற்படி சோதனையில் பணியிலிருந்த அனைத்து ஆளினர்களுக்கும் எவ்வித மன உளச்சலோ, அச்சுறுத்தலோ இல்லாமல் நடைபெற்றது. அலுவலகத்தில் இருந்த பதிவேடுகள் மற்றும் இதர ஆவணங்களுக்கு சேதாரமின்றி அனைத்தும் சம்மந்தப்பட்ட இடத்திலே பாதுகாப்பாக வைக்கப்பட்டன. மேற்படி திடீராய்வு 19.30 மணிக்கு முடிக்கப்பட்டது. மேற்படி சம்பவங்கள் அனைத்தும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள திடீராய்வு மகசரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது சம்மந்தமாக உரிய நடவடிக்கை மேற்கொள்ள

வேண்டுமாய் கேட்டுக்கொள்ளப்படுகிறது. தங்கள் உண்மையுள்ள, மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டம், இணைப்பு: 1.திடீர் ஆய்வு மகஜர் 2.ரொக்கம் ரூபாய் 14,600/- 4.ஐந்து நபர்களின் வாக்குமூலங்கள்.

அம்மா, நான் இன்று 28.01.2019 மாலை 17.30 மணிக்கு மேலே கண்ட புகார் மனு தொடர்பாக சட்டக்கருத்துரை பெற்று விழுப்புரம் ஊ.த.க பிரிவு குற்ற எண்.03/2019 u/s 7 P.C. Act 1988 as Amended by Prevention of Corruption (Amendment) Act 2018 ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. முதல் தகவல் அறிக்கையின் அசல் நகலையும் வாதியின் புகார் மனுவையும், இணைத்து கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்குகள் சிறப்பு நீதிமன்றம், விழுப்புரம் அவர்களுக்கும் இதர நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் பணிந்து அனுப்பப்படுகிறது.

(M.சதீஷ்)
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
விழுப்புரம்.